1974 மார்ச் 6]

திரு. கு. இராசமாணிக்கம்: தலைவர் அவர்களே, இந்தத் தெய்வீகப் பேரவையிலே மனிதத் தெய்வங்கள் கலந்துகொள்கின்றனவா அல்லது தெய்வலோகத்திலே உள்ளவர்கள் கலந்து கொள்கின்றனரா?

(விடை இல்லை.)

முதியோர் இல்லங்கள்

*** 310 வினு.—திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா—

திருத்தணி, திருவரங்கம், மயிலை கபாலி ஆகிய கோயில்களின் உபரி நிதியில் இருந்து முதியோர் இல்லங்கள் நடத்தும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: திருத்தணி திருக்கோயிலின் உபரி நிதியிலிருந்து மட்டும் முதியோர் இல்லம் ஒன்று ஆரம்பித்து நடத்தும் செயற்குறிப்பு ஒன்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின் பரிசீலனையிலிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

3. பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியிலிருந்து நீக்கக் கோரும் தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அடுத்த அலுவல், பேரவையின் துணைத் தலைவர் திரு. பெ. சீனிவாசன் அவர்களைப் பதவியிலிருந்து நீக்க வேண்டுமென்று திரு. செ. கந்தப்பன் அவர்கள் கொடுத்திருக்கிற தீர்மானம். அதற்கு இந்த அவை அனுமதி அளிக்கிறதா என்பதை அறிவதற்கு முன்னதாக இந்தத் தீர்மானத்தை நான் படிக்க வேண்டும். தீர்மானத்தைப்படிக்கிறேன்:

'This House resolves that Thiru P. Seenivasan be removed from the office of the Deputy Speaker of the Assembly''.

தீர்மானத்திற்கு ஆதரவு ஆக உள்ளவர்கள் எழுந்து நிற்க வேண்டும்.

(35 உறுப்பினர்களுக்கு மேல் எழுந்து நின்றனர்.)

THIRU K. T. K. TANGAMANI: Sir, before the Resolution is put to vote . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தீர்மானம் போட்டாயிற்று. சட்டப் பேரவை விதி 54 (1)-ன் படி 35 உறுப்பினர்கள் இதற்கு அனுமதி அளித்தாக வேண்டும். 35 உறுப்பினர்களுக்கு மேலாக எழுந்து நின்றிருப்பதால் பேரவை அனுமதி அளிக்கிறது என்று கருதுகிறேன். பேரவை விதி 54 (1)-ன் படி இன்றே அல்லது இன்னும் ஏழு நாட்களுக்குள்ளாகவோ அதை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளலாம் என்று இருக்கிறது. தீர்மானத்தின்மீது விவாதம் 12—3—1974 ஆம் நாளன்று காலை 10 மணி முதல் 12 மணி வரையிலும் நடைபெறும் என்பதை இந்த அவையின் அனுமதியோடு அறிவிக்கிறேன். அடுத்து . . .

4. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத் துணைத் தலைவர் அவர்களைப் பதவியில் இருந்து நீக்கக் கோரும் தீர்மானத்தில் எவ்விதக் காரணமும் சொல்லப் படாதது குறித்து.

திரு. கே. டி. கே தங்கமணி: நான் முதலிலேயே பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணினேன். தீர்மானத்தை மூவ் பண்ணுவதற்கு ஆட்சேபணை கிளப்புவது என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டராகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த பாயின்ட் ஆப் ஆர்டர் முடிந்துவிட்டது. அடுத்து 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம் . . .

1974 மார்ச் 6]

திரு. கே. டி. கே. தங்கமணி: அது தொடர்கிறது தீர்மானம் என்ன சொல்கிறது என்றால்,

'This House resolves that Thiru P. Seenivasan be removed from the office of the Deputy Speaker of the Assembly'.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முடிந்துவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று கேட்டுக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முடிந்து போய் விட்டது. ஆகவே, அதைப்பற்றி மீண்டும் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்ப முடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி: 'லீவ்' கொடுத்த பிறகும் நான் பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது டிஸ்கஷன் வரும்பொழுது நீங்கள் எழுப்பிக் கொள்ளுங்கள்.

திரு கே. டி. கே. தங்கமணி: ரெஷல்யூஷனைப்பற்றி நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்பியிருக்கிறேன். 'லீவ்' கொடுத்த தற்குப் பிறகு நான் பாயின்ட் ஆப் ஆர்டர் கிளப்புகிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது முடிந்துவிட்டது. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தேதி குறிப்பிட்டு நேரம் குறிப்பிட்டாகிவிட்டது. ஆகவே அது முடிந்த பிறகு பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

THIRU K. T. K. TANGAMANI: If a Resolution is to be taken under a particular provision of the Constitution or Rules, it will have to be properly framed. What I am going to raise . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் தங்கமணி அவர்களை முதலிலே கேட்டுக்கொள்கிறேன். இந்தத் தீர்மானம் முடிந்து போயிற்று என்ற நிலையில் நான் அடுத்த பிளைலைக்குப் போய் விட்டேன். அதைப்பற்றி பாயின்ட் ஆப் ஆர்டர் ஒன்றும் இல்லை. அடுத்து 1974-75 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம் . . .

[1974 மார்ச் 6

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): திரு. சீனிவாசன் அவர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறார்கள், அவர்கள் உட்கார வேண்டியது . . .

திரு கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டரை ரெய்ஸ் பண்ணுவதற்கு எனக்கு அனுமதி உண்டா இல்லையா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் எந்த விதிமுறையின் கீழே கேட்கிறீர்கள் ? அதை முதலில் சொல்லுங்கள் . . .

திரு. எம். சுரோந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர் ரெய்ஸ் பண்ணக்கூட விடுவதற்கு நீங்கள் தயாராக இல்லை யென்றால் என்ன செய்வது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கமணி அவர்கள் எந்த விதியின் கீழ் பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்புகிறார்கள் என்பதைச் சொல்ல வேண்டும்.

திரு கே. டி. கே. தங்கமணி: எதற்காக என்று நான் சொல் வதைக் கேளுங்களேன். 10, 15 நிமிடம் ஆகட்டுமே, கொள்ளையா போகுது ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்த விதியின்கீழே பாயின்ட் ஆப் ஆர்டர் என்பதை முதலிலே நீங்கள் சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆர்டிகள் ஆப் தி கான்ஸ்டிட் யூஷனை வாசிக்கிறேன். ஆர்டிகள், 181-சி என்ன சொல்கிறது என்றால்

'The Speaker shall have the right to speak in, and otherwise to take part in the proceedings . . . '

என்று சொல்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது ஸ்பீக்கர் பேசுவதைப் பற்றி வருகிறது. அப்படிப்பட்ட நிலைமை இப்பொழுது எழ வில்லை. இங்கே 179-வது ஆர்டிகிளைப்பற்றிய நடவடிக்கைதான் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: லோக் சபா டிபேட்ஸ் வால்யூம் 19-ஐ நீங்கள் படிக்க வேண்டும் . . .

1974 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: லோக் சபா நடவடிக்கைகளை நான் படிக்க வேண்டுமென்று சொன்னால் நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகளை நீங்கள் படிக்க வேண்டுமென்று நான் சொல்ல வேண்டும். 179-வது ஆர்டிகிளைப் பொறுத்தவரையில் எந்த முறை மீறப்பட்டிருக்கிறது என்று சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: 179-வது ஆர்டிகிளுடன் 181-ஐயும் படிக்க வேண்டும் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 179-ஐ முதலில் சொல்லுங்கள்.

THIRU K. T. K. TANGAMANI: In Article 179—

'A Member holding office as Speaker or Deputy Speaker . . may be removed from his office by a resolution of the Assembly passed by a majority of all the then members of the Assembly . . . '

என்று இருக்கிறது. அந்த ரூலை நாம் இன்வோக் பண்ணுகிறோம். நம்முடைய விதியும் அந்த விதியின் அடிப்படையிலேதான் போடப்பட்டிருக்கிறது. அடுத்து 181-வது ஆர்டிகிள் என்ன சொல்கிறது என்றால்

'The Speaker shall have the right to speak in, and otherwise to take part in the proceedings . . . '

என்று இருக்கிறது. ஆகவே, வரக்கூடிய ரிஸல்யூஷன் எப்படி இருக்க வேண்டும் என்றால் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்பீக்கர் பேசுவதைப்பற்றி 181-வது ஆர்டிகிள் வருகிறது . . .

திரு. கே. டி. கே. தங்கமணி. கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் கூடக் கொடுக்கிறேன், ஆனால் விதிமுறைகளை ஒட்டி இருக்க வேண்டும். நீங்கள் எதைப்பற்றிப் பேசுகிறீர்களோ அது ஏற்கெனவே முடிந்தாகி விட்டது. ஆகவே அதைப்பற்றி மீண்டும் சொல்ல வேண்டுமென்றால் விவாதம் வரும்பொழுது சொல்லலாம்.

[1974 மார்ச் 6

திரு. கே. டி. கே. தங்கமணி: பாயின்ட் ஆப் ஆர்டர் செய்ஸ் பண்ணினால் அலோ பண்ணக் கூடாது என்று முடிவு செய்து விட்டுத்தான் வந்திருக்கிறீர்களா?

மாண்புமிகு பேரவை தலைவர்: சட்ட மன்ற நிகழ்ச்சி ஆர்டிகிள் 179-ஐ ஓட்டியது. 179-ஐ ஓட்டியதாக இருந்தால் அதிலே எந்த முறை மீறப்பட்டிருக்கிறது என்பதைச் சொல்லலாம். அதுவல் லாமல் ஸ்பீக்கர் எப்பொழுது பேசலாம், எப்பொழுது பேசக் கூடாது என்பதைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அது இப்பொழுது தேவையில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி: நாங்கள் சொல்வதைக் கொஞ்சம் வாங்கிக் கொள்ளுங்கள். நாங்களும் லாயர்கள். விதிமுறை தெரிந்தவர்கள். நீங்கள் லீவ் கொடுத்து விட்டீர்கள்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் படித்தது, நான் படித்தது என்று சொல்ல வேண்டியதில்லை எந்த விதிமுறை மீறப்பட்டிருக்கிறது என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஸ்பீக்கர் ஸ்பீக்கராக இருங்கள், நான் ப்ரவோக்காஞல் பரவாயில்லை.

(குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்கள் விதிமுறைகளெல்லாம் தெரிந்தவர் என்று சொன்னீர்கள். அப்படி விதிமுறைகளெல்லாம் தெரிந்தவருக்கு சபாநாயகரை எப்படி இந்த அவையில் குறிப்பிட வேண்டுமென்று தெரிந்திருக்க வேண்டும். தான் விதிமுறைகளைத் தெரிந்தவர் என்று சொல்லி விட்டு அதற்கு மாறாக தங்கமணி நடப்பது முறையல்ல. இப்பொழுது அந்தத் தீர்மானம் இங்கே முன்மொழியப் பட்டு அந்தத் தீர்மானத்திற்கு அவையில் அனுமதி இருக்கிறதா என்று கேட்டு, இருக்கிறது என்றும் சொல்லியாகிவிட்டது. அதை முன்மொழிவதற்கான நேரமும், காலமும் குறிப்பிட்டாகிவிட்டது. அது ஆர்டிகிள் 179-ஐ ஓட்டி வருகிறது. அதிலே முறைகேடு இருந்தால் அதைச் சுட்டிக் காட்டுவதற்காகத்தான் பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டுமே தவிர, அதன்மீது ஸ்பீக்கர்

1974 மார்ச் 6] [பேரவைத் தலைவர்]

பேசுவது, டெப்டி ஸ்பீக்கர் பேசுவதைப்பற்றி இப்பொழுது பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்புவது முறையல்ல. ஆகவே, அதில் எந்தவிதமான பாயின்ட் ஆஃப் ஆர்டரும் இல்லை என்று சொல்லிய பிறகும் மீண்டும் மீண்டும் அதையே சொல்வது முறையல்ல.

திரு. கே. டி. கே. தங்கமணி: ஆகவே என்ன சொல்கிறேன் என்றால்,

There is a resolution before this House. Leave has been given and that resolution is going to be taken up later. I raise a point of order and say that the resolution is not in order. In the House of Commons, the Mother of Parliaments there was such a resolution. It said :—

"That in view of the express provisions of Standing Order No. 26, for the protection of the rights of minorities, this House regrets the action of Mr. Speaker on the 29th May 1925, when contrary to recent precedents, he granted the Closure at 11-45 p.m. on the first day's Debate in the Motion for the Second Reading of the Finance Bill."

Thus a specific resolution containing the charge had been moved in the House of Commons.

In the same way a resolution was moved in the Lok Sabha in 1954 against Shri Mavlankar and the then Deputy Speaker gave the ruling that when the resolution is moved for the removal of Speaker, because the Speaker has got a right to reply, the charges must be specific and precise. If it is vague, it will be out of order.

At that time, the Prime Minister, the magnanimous Prime Minister Pandit Jawaharlal Nehru said that although it would not be in order, let us not stand on formalities but let this resolution be as it is.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, இதுபோன்ற தீர்மானம் இந்த அவையிலேயே மூவ் செய்யப்பட்டு ஸ்பீக்கர் ரிமூவ் செய்யப்பட்டிருக்கிறார்.

[1974 மார்ச் 6

திரு. கே. டி. கே. தங்கமணி: அன்றைக்கு மௌலாங்கரை ரீமூவ் பண்ணச் செய்த ரிசல்யூஷனிலே கூட,—

" That this House, having taken into consideration the conduct of the Speaker of the House as regards giving his consent to adjournment motions, disallowing questions, etc., feels that he has ceased to maintain an impartial attitude necessary to command the confidence of all sections of the House. . . "

இதிலே ஸ்பெசிஃபிக்காக இல்லே என்ற முறையிலே அங்கே ரூலிங் கொடுக்கப்பட்டிருக்கிறது.

What I say is, the House must be taken into confidence, as to what are the specific charges against the Deputy Speaker. I am not at all concerned about what the Deputy Speaker will have to say. We as members of the House must know what are the causes which have led to this resolution for the removal of Deputy Speaker. The resolution must not be bald. We must know what are the instances, specific charges against the Deputy Speaker. The person who had given notice of this resolution must have explained the specific charges in the resolution.

மாண்புமிகு போவைத் தலைவர்: காரணமில்லாமல் பொதுவாகக் கொடுக்கப்பட்டிருப்பது முறையல்ல என்பதுதானே உங்கள் வாதம்?

திரு. கே. டி. கே. தங்கமணி: நீங்கள் அதற்கு ரூலிங் கொடுக்க வேண்டும். அதை நீங்கள் ஆதரிக்கலாம், இல்லாமலும் இருக்கலாம்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, I would like to invite the attention of the House to Rule 83 (3) of our Assembly Rules which says as follows:—

" A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker ".

Sir, what I would like to submit is that so far as the point of order raised by the hon. Member Thiru K.T.K.Tangamani is concerned, he has got a right to speak because it is a fundamental

right so far as Opposition is concerned to raise point of order and he may be given his full say before the point of order is decided by the Speaker.

So far as the instant resolution is concerned, we on behalf of our Party assuming a neutral attitude, feel that charges which are levelled against the Deputy Speaker will have to be just mentioned in the resolution for his removal. But to me it appears that it is only a fit retribution that is being meted out to him ; what has been done previously is being recalled to my memory and I think it is still green in my memory that parallel proceedings of the House took place here.

I do not want to say anything in detail at this moment. Suffice it for me to say that the point of order that has been raised by Thiru Thangamani regarding this particular point, needs further clarification since the resolution is very simple and bald and bereft of depth; as such I think details should have been added to the resolution.

Now that the resolution is being taken up for discussion on the 12th instant, it would be better if all the points are voiced on that date so that we may have a full and detailed discussion on this matter. That is the submission I want to make before this House.

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயின்ட் ஆப் ஆர்டர் சார். மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்களின் பாயின்ட் ஆஃப் ஆர்டருக்குத் தீர்ப்பு சொல்லிவிடுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I would submit that the point of order raised by the hon. Member Thiru K. T. K. Tangamani is very relevant. The resolution cannot be bald, whimsical and arbitrary and we legislators request that the Speaker should not permit such a resolution. That is what I would like to submit.

(Thiru V. Krishnamoorthi rose)

THIRUMATHI T. N. ANANDANAYAKI : We must have specific charges.

[1974 மார்ச் 6

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் என்னவென்று சொல்லுங்கள். காரணமில்லாமல் தீர்மானம் வந்து இருக்கிறது என்பதுதானே உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர்?

திருமதி த. ந. அனந்தநாயகி: நீங்கள் உதவி சபாநாயகரை நீக்குவதற்கு bald, whimsical and arbitrary ஆகத் தீர்மானம் கொண்டுவர முடியாது. எங்களுக்குக் காரணம் தெரிய வேண்டும். அப்பொழுதுதான் சரியா இல்லையா என்று தெரியும். Reasons for bringing in this resolution must be given.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆஃ ஆர்டர் இல்லை.

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, நம்முடைய சட்டமன்ற விதிமுறை 52-இல்,

'A member wishing to give notice of a resolution under clause (c) of Article 179 of the Constitution for the removal of the Speaker or the Deputy Speaker shall do so in writing to the Secretary with a copy to the Speaker.'

இதுதான் இருக்கிறது. ஆகவே, காரணம் கொடுக்க வேண்டுமென்று சட்டமன்ற விழுமுறைகளில் கிடையாது. நம்முடைய சட்டமன்ற விதி 52-இல் தெளிவாக இருக்கிறது, ஒரு உறுப்பினர் சபாநாயகர் மீதோ, துணைச் சபாநாயகர் மீதோ நம்பிக்கையில்லை என்று எழுதிக்கொடுத்தால் போதும், காரணம் என்ன என்று கொடுக்க வேண்டும் என்று விதிமுறையில் இல்லை.

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர்கள் எழுப்பிய பாயின்ட் ஆஃப் ஆர்டருக்குத் தீர்ப்பு சொல்லிவிடுகிறேன்

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரவர்கள் ஒரு பிரச்னையை எழுப்பியுள்ளார்கள், மேலைநாங்கரைப்பற்றி. , இந்த மன்றத்திலேயே சபாநாயகரை நீக்கும் சமயத்தில் எந்தக் காரணமும் இல்லாமல் நாங்கள்

1974 மார்ச் 6] [திரு. வி. கிருஷ்ணமூர்த்தி]

கொண்டு வந்தோம். அது பாலானது மட்டுமல்லாமல் கோர்ட்டில் அப்பீலும் செய்தார்கள். ஆகவே அதை இப்பொழுது எழுப்ப வேண்டியதில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட்: நம்முடைய சட்டமன்ற விதி முறைகளில் விதி 83-இன்கீழ் மன்றத்திலே உள்ள எந்த உறுப்பினரும் எந்த நேரத்திலேயும் ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வரலாம் என்று இருக்கிறது. நம்முடைய மன்றத்தில் இதற்கு முன் உள்ள நடவடிக்கைகள், மன்றத்திலே எந்த உறுப்பினரும் பேசும்பொழுது எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது வேறு யாராவதோ குறுக்கிட்டால் பேசுபவர்கள் அமர வேண்டு மென்ற நடைமுறையை நாம் இத்தனை காலமாகப் பின்பற்றி யிருக்கிறோம்.

நீங்கள் துணைச் சபாநாயகர்மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது மன்றத்தின் அனுமதியைப் பெற அந்தத் தீர்மானத்தை வாசிக்கும் நேரத்தில் எதிர்க் கட்சியிலுள்ள ஒரு கட்சியின் தலைவர் எழுந்து ஒரு ஒழுங்குப் பிரச்னையைக் கொண்டு வந்தார்கள்.

THIRU N. GANAPATHY: Sir, is it a commentary ?

THIRU G. R. EDMUND: It is not a commentary; I am only asking for a ruling from the Speaker. Now we are adopting a certain procedure and I am only seeking a ruling whether that is correct or not.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் திரு. தங்கமணி அவர்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை ஒத்ததா அல்லது வேறு ?

THIRU G. R. EDMUND: It is a different point of order.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர் களுடைய பாயின்ட் ஆப் ஆர்டருக்குத் தீர்ப்புக் கொடுத்த பிறகு உங்களுடைய பாயின்ட் ஆப் ஆர்டரை எழுப்பலாம்.

திரு. தங்கமணி அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், திருமதி அனந்தநாயகி அவர்களும் 'இந்தத் தீர்மானம் காரணம் காட்டாமல் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, இது முறைகேடான தீர்மானம்' என்று கூறினார்கள். ஆனால், இந்தத் தீர்மானத்தைக் கொடுப்பதுபற்றி இருக்கின்ற விதி முறைகளில் காரணத்தோடுதான் கொடுக்க வேண்டுமென்று இல்லை. மந்திரிசபை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டு வரும்போதுகூட காரணம் காட்டியும் கொடுக்கலாம், காரணம் காட்டாமலும் தீர்மானம் கொடுக்கலாம். அந்த வகையிலே தீர்மானங்கள் வந்திருக்கின்றன. ஆகவே, இதிலே எந்தவிதமான முறைகேடும் இல்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. க. உசொ. எட்மண்ட்: என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர்—நீங்கள் ஒரு தீர்மானத்தை வாசிக்க எழுந்து நிற்கிறீர்கள். சபாநாயகர் எழுந்து நிற்கும்போது ஒழுங்குப் பிரச்சினையை யாரும் கொண்டு வரலாம். ஒரு உறுப்பினர், அதுவும் ஒரு கட்சியின் தலைவர் ஒழுங்குப் பிரச்சினை என்று கேட்டு எழுந்து நிற்கும்போது 'அது என்ன ஒழுங்குப் பிரச்சினை?' என்று தாங்கள் கேட்டிருக்க வேண்டும். உங்களுடைய நோக்கம் எல்லாம் எப்படியாவது தீர்மானத்தை வாசித்து சட்டமன்றத்தின் அனுமதியைப் பெற்று விட வேண்டுமென்றிருந்த காரணத்தால் . . (மணி அடிக்கப் பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நோ பாயின்ட் ஆப் ஆர்டர். அடுத்து, 1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது பொது விவாதம். திரு. பாலையா.

(5) 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம்.

*** திரு. ஏ. பாலையா:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தின் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 1974-75-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீது ஒருசில கருத்துக்களை நான் கூற விழைகிறேன்.

1974-75-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சுமார் 10 கோடி ரூபாய்க்கு அதிகமாக வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இது சுமார் 12.56 கோடி ரூபாய் பற்றாக்குறை நிதிநிலை அறிக்கையாக